


**கடற்கரைக் கவியரங்கு—600**

**நாள் 04-04-2021**







# பொன்விழா நாளில்...!

சென்றதாம் ஆண்டுஐம்பது தன்னை அழகுடன் நிறைவு செய்து,
பொன்விழா என்னும் தேரில் பூரிப்புடன் செல்லும் காலம்!
பொன்னடி கவிஞர்க்குச் செய்தவோர் நறுஞ்சீர்க் கோலம்!
தன்மனச் சிந்தையெல்லாம் தகைவுடன் தள்ள முடியும்!
கொண்டவோர் தலைப்பு என்றேக் கூறிட எவரும் இல்லை!



வன்மனம்கொண்ட சொற்கள் வேண்டா என்பதே வகுத்த நியதியங்கு!
தென் தமிழ்ப் பெருமைக் காக்க தேரிய அறங்களோடு நாளும்,
பொன்கரமாய்ப் பொன்னடிக்கு பேரன்பர் வான்முகிலோடு சீர் அய்யாசாமி!
தன்கரத்தால் பாவேந்தர் தகுதியுடன் ஆக்கியப் பெருமன்றம்!
பொன்னடியின் புதுவழியாய்க் கடற்கரைக் கவியரங்கம்!

தென்றலோடும் மழைகோக்கும் தெள்ளிய சென்னைக் கடற்கரையில்;
வண்டெனக் குவியும் கவிஞர் வளர்தமிழ் கவிதை சொல்ல,
கண்டிடுவோம் அவ்வபோது பொன்னடியின் கருத்தியல் தானே!
கொண்டதோர் காலக் கணக்கில் அறுநூறாம் கவியரங்கின்று!
இன்னும் பலயுகமாய், நூறாண்டும் தான் கடந்து, தமிழ்போல் இனிதுவாழ்க!



அன்புடன்,

கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்,



சென்னை—600073
04-04-2021